## பொள்ளாச்சி நகராட்சி

## 15.05.2018 ம் அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

958) பொள்ளாச்சி நகராட்சியில் நகராட்சி எல்லைப்பகுதி முழுவதும், மொத்தமுள்ள 143.28கி.மீட்டர் நீளமுள்ள சாலைகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது இதில் 5277 ஆள் இறங்கு குழிகளும், 100.07கி.மீட்டர் நீளத்திற்கு கழிவுநீர் சேகரிப்பு குழாய்களும் பதிக்கப்பட்டுள்ளன. இதனால் சாலைகள் பழுதடைந்து மோசமான நிலையில் உள்ளது. மேலும், போக்குவரத்திற்கு பெரிதும் இடையூராக உள்ளது.

பொது மக்கள் நலன் கருதியும், போக்குவரத்தை கருத்தில் கொண்டும் கீழ்க்கண்ட சாலைகளில் தார்தள பணி அமைக்க, நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் 2018–2019ம் நிதியாண்டில் பணி மேற்கொள்ள ரூ.1500.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

**பணிகளின் விபரம்**

| வ. எண் | வேலையின் பெயர் | வார்டு எண். | சாலையின் நீளம் கி.மீ | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | என்.வி.எம்.வீதி, மணிமேகலை வீதி, அம்பேத்கார் வீதி மெயின் மற்றும் குறுக்கு வீதிகள், கே.ஆர்.ஜி வீதி, செல்லக்குமாரர் வீதி, ஆலமரத்து அம்மன் கோவில் வீதி, அய்யாவு வீதி, கே.வி.ஆர் நகர், குமரன் நகர் மெயின் மற்றும் குறுக்கு வீதிகள் ரங்கசாமி லே அவுட், குமரன் நகர் முதல் நேதாஜி ரோடு முகப்பு வரை மற்றும் திருவேங்கடம் நகர் ஆகிய பகுதிகளில் தார்த்தளம் அமைத்தல் | 1, 2, 22, 23 | 8.51 | 400.00 |
| 2. | ரிசர்வாயர் சாலை, ரிசர்வாயர் சாலை குறுக்கு வீதிகள், வருமான வரித்துறை அலுவலக சாலை, வி.கே.வி. லே அவுட், மார்கெட் ரோடு, சல்டானா ரோடு, பெருமாள் செட்டி வீதி, ராமு வீதி, அப்துல்கலாம் வீதி, முத்து சாமி வீதி சுப்பிரமணியர் வீதி, கட்ட பொம்மன் வீதி, வ.ஊ.சி வீதி, குப்புசாமி வீதி, ஆரோக்கிய நாதர் வீதி, கரிகாலன் வீதி, குப்பாண்டவர் வீதி, ஜூப்ளி கிணறு வீதி, சாஸ்திரி வீதி, செய்னுலாப்தீன் வீதி, கல்யாண் ஜி மில் வீதி, எஸ்.எஸ் கோவில் வீதி, திருமூர்த்தி வீதி, காமாட்சி அம்மன் வீதி பால மாணிக்கம் ம்சட்டியார் வீதி, ஆறுமுகம் வீதி, கந்தசாமி லேன் மற்றும் எஸ்.வி நாயுடு வீதி ஆகிய பகுதிகளில் தார்த்தளம் அமைத்தல். | 3, 4, 17, 18, 19, 20 | 8.88 | 400.00 |
| 3. | பணிக்கம்பட்டி ரோடு, மாக்கினாம்பட்டி ரோடு, மகாலிங்கபுமம் ரவுண்டானா, கண்ணகி வீதி, அண்ணா நகர் மெயின் ரோடு, ஆறுமுகம் நகர் மெயின் வீதி, காமராஜர் நகர் முதல் ஆறுமுகம் நகர் வரை, ஊத்துக்காடு ரோடு மற்றும் வெள்ளையம்மாள் லே அவுட் ஆகிய பகுதிகளில் தார்த்தளம் அமைத்தல் | 5, 6, 9, 34 | 6.07 | 300.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | இமாம்கான் வீதி, எஸ்.எஸ்.கோவில் வீதி, பஜார் வீதி, காந்தி மண்டபம் வீதி, சத்திரம் வீதி, தெப்பக்குளம் வீதி, குறிஞ்சி நகர் குறுக்கு வீதிகள், ஆர்.கே.நகர், நல்லிகவுண்டர் லே அவுட், அண்ணபூரனியம்மாள் லே அவுட், பி.கே.எஸ்.லே அவுட், ஓம்பிரகாஷ் தியேட்டர் ரோடு மற்றும் எம்.ஜி.ஆர் நகர் மெயின் மற்றும் குறுக்கு வீதிகள் ஆகிய பகுதிகளில் தார்த்தளம் அமைத்தல் | 16, 28, 29, 32, 34, 35 | 9.00 | 400.00 |
| | | | 32.46 | 1500.00 |

மேற்காணும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்குண்டான தொகையை முழுமான்யமாக பெற அரசிற்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**959 )** பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் திடக்கழிவுகளை தரம் பிரித்து மக்கும் மற்றும் மக்காத கழிவுகளாக சேகரிக்கப்பட்டு, உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு வருகிறது. உரக்கிடங்கானது நகராட்சி எல்லைக்கு வெளியில் உள்ளது. மக்கும் குப்பைகளை ஆங்காங்கு நுண்ணுயிரி உர மையம் அமைத்து உரமாக்கினால் வாகனச் செலவு, டீசல் மற்றும் வண்டிகளின் பராமரிப்பு செலவு குறையும். திடக்கழிவுகளை கையாளும் பணியில் தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, சேகரமாகும், திடக்கழிவுகளை திடக்கழிவுகள் உருவாகும் இடத்தின் அருகிலேயே தரம் பிரித்து மக்கச் செய்து உரம் தயார் செய்யும் வகையில் 4 இடங்களில் நுண்ணுயிரி உரமாக்கல் மையங்கள் (மைக்ரோ கம்போஸ்ட் பிளாண்ட் 5TPD) அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

**<u>பணிகள் விபரம்:</u>**

| வ. எ ண் | வேலையின் பெயர் | அளவு | எண் ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத் தில்) |
|---|---|---|---|---|
| 1. | வடுகபாளையம் மயானத்தில் நுண்ணியிரி உரமாக்கம் மையம் (மைக்ரோ கம்போஸ்ட் பிளாண்ட்) மையம் அமைத்தல் | 5 TPD | 1 | 57.00 |
| 2. | சுதர்சன் நகர் தண்ணீர் தொட்டி அருகில் நுண்ணியிரி உரமாக்கம் மையம் (மைக்ரோ கம்போஸ்ட் பிளாண்ட்) மையம் அமைத்தல் | 5 TPD | 1 | 57.00 |
| 3. | அழகாபுரி வீதி காந்தி வாரச்சந்தை வளாகம் நுண்ணியிரி உரமாக்கம் மையம் (மைக்ரோ கம்போஸ்ட் பிளாண்ட்) மையம் அமைத்தல் | 5 TPD | 1 | 57.00 |
| 4. | ஜோதி நகர் நட்சத்திர பூங்கா நுண்ணியிரி உரமாக்கம் மையம் (மைக்ரோ கம்போஸ்ட் பிளாண்ட்) மையம் அமைத்தல் | 5 TPD | 1 | 57.00 |
| | மொத்தம் | | 4 | 228.00 |

மேற்காணும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்குண்டான தொகையை முழுமான்யமாக பெற அரசிற்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**960)** பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் திடக்கழிவுகளை தரம் பிரித்து மக்கும் மற்றும் மக்காத கழிவுகளாக சேகரிக்கப்பட்டு, உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்பபட்டு வருகிறது. உரக்கிடங்கானது நகராட்சி எல்லைக்கு வெளியில் உள்ளது. மக்கும் குப்பைகளை ஆங்காங்கு நுண்ணுயிரி உர மையம் அமைத்து உரமாக்கினால் வாகனச் செலவு, டீசல் மற்றும் வண்டிகளின் பராமரிப்பு செலவு குறையும். திடக்கழிவுகளை கையாளும் பணியில் தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, சேகரமாகும், திடக்கழிவுகளை திடக்கழிவுகள் உருவாகும் இடத்திதின அருகிலேயே தரம் பிரித்து மக்கச் செய்து உரம் தயார் செய்யும் வகையில் 4 இடங்களில் நுண்ணுயிரி உரமாக்கல் மையங்கள் (மைக்ரோ கம்போஸ்ட் பிளாண்ட் 5TPD) அமைக்கப்படவுள்ளது.

மேலும், அமைக்கப்படும் மையங்களுக்கு திடக்கழிவுகள் கொண்டு செல்லும் வகையிலும், சுற்று சூழல் சுகாதாரம் மேம்படும் வகையிலும், மின்கலம் மூலம் இயக்கப்படும் வாகனங்கள் வாங்கி பயன்படுத்த வேண்டியுள்ளது. அதற்கிணங்க தேவையான மின்கலம் மூலம் இயக்கப்படும் வாகனங்கள் வாங்குவதற்கு கீழ்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

**<u>பணிகள் விபரம்:</u>**

| வ. எண் | வேலையின் பெயர் | எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவுகள் சேகரம் செய்ய மின்கலம் மூலம் இயக்கப்படும் வாகனங்கள் (Battery vehicle) வாங்குதல் | 12 | 22.00 |

மேற்காணும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையை முழுமான்யமாக பெற அரசிற்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

961) பொள்ளாச்சி நகராட்சி அலுவலகம் கட்டப்பட்டு சுமார் 90 வருடங்களுக்கு மேல் ஆனதால், மேற்கூரைகள் உடைந்து மழைக்காலங்களில் மழைநீர் உள்ளே புகுவதால், முக்கிய ஆவணங்கள் பாதுகாக்க முடியாத சூழ்நிலையில் இயங்கி வந்தது. பழுதடைந்த கட்டிடத்திற்கு பதிலாக புதியதாக அலுவலகக்கட்டிடம் கட்ட இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் (Infra Structure and Operation and maintenance Gap Filling fund) நிதியில் 2014–15 நிதியாண்டில் கீழ்த்தளம் மற்றும் தரைத்தளம் கட்டுவதற்கு ரூ.200.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒதுக்கீடு செய்த நிதிக்கேற்ப, பணிகள் தொடங்கி முடிக்கப்பட்டது.

ஆனால் பணியாளர்கள் எண்ணிக்கை காரணமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில், கட்டப்பட்ட அறைகள் போதுமானதாக இல்லாத சூழ்நிலை ஏற்பட்டது. அலுவலகக்கட்டிடம் முழுமை பெற கூடுதலாக முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் மேற்கூரை மற்றும உள் தடுப்பு பணிகள் ஆகியவை செய்யப்பட வேண்டும். ஆனால் நகராட்சி வசம் போதிய நிதி வசதி இல்லாததால் ஏதாவது தேசிய மயமாக்கப்பட்ட வங்கி ஒன்றில் மேற்காணும் பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.199.00 இலட்சத்தினை கடனாக பெற்று செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நகராட்சி மூலமாக 25.01.2016ம் தேதிய கடித நகலில் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது.

கருத்துருவிற்கேற்ப பணிக்குரிய மதிப்பீட்டுத் தொகையை ஏதாவது தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஒன்றில் கடனாகப்பெற்று செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் தனது கடித ந.க.எண். 1056/P1/2016 நாள். 02.02.2016ல் ரூ.199.00இலட்சதிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

நிர்வாக அனுமதிக்கேற்ப, அதற்குரிய தொழில் நுட்ப அனுமதியை, தலைமை பொறியாளர், சென்னை அவர்கள் தனது கடித எண்.1041/2016/DO2 நாள். 04.02.2016ல் வழங்கப்பட்டது.

தொழில் நுட்ப அனுமதிக்கேற்ப, 24.02.2016ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதும், மதிப்பீட்டை விட 4.99 சதவீதம் அதிகம் ஒப்பந்தப்புள்ளி

| | |
|---|---|
| | அளித்த திரு.ஆர்.சுப்பிரமணியம். அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை பொள்ளாச்சி நகராட்சி நகர் மன்றம் தனது தீர்மான எண். 250 நாள். 01.03.2016ல் ஒப்புதல் வழங்கியது.<br>தீர்மானத்தின் படி அடிப்படையில் 02.03.2016ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது.<br>இந்நிலையில் கட்டிடத்தை முழுமை பெற்று பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு, கட்டிடத்தின் முன் மாதிரி வரைப்படத்தை நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் தலைமை பெறியாளருடன் கலந்து ஆலோசனை நடைபெற்றது.<br>ஆலோசனையில் இரண்டாம் தளத்தின் மேற்கூரையின் மேற்பரப்பில் அலங்கார முக்கோன வடிவமைப்புப்பணிகள் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது. ஆனால் அவ்வாறு மேற்காணும் பணிகளை மேற்கொள்ள தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படவில்லை.<br>இவ்வாறு மதிப்பீட்டில் இல்லா ஒரு சில இனங்களையும் மற்றும் மதிப்பீட்டில் இருக்கும் ஒரு சில இனங்களில் அளவுகள் கூடுதலாக செய்தும் முடித்து, பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளது.<br>எனவே, இவ்வாறு மதிப்பீட்டில் இல்லாத ஒரு சில இனங்கள் செய்வதாலும் மற்றும் மதிப்பீட்டில் உள்ள இனங்களில் அளவுகள் கூடுதலாக செய்வதாலும், ஏற்படும் செலவு தொகை மதிப்பீட்டுத் தொகையை விட கூடுதலாக ஏற்பட்டால் அதனை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மதிப்பீட்டுத் தொகையை காட்டிலும் கூடுதலாக ஏற்படும் செலவுத் தொகையை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். |